SRI RAMACHANDRA MEDICAL CENTRE
NEWS RELEASE
Porur, Chennai-600 116. Ph.: 044-23860217. www.sriramachandra.edu.in

# ஸ்ரீ இராமச்சந்திரா மருத்துவ மையத்தில் நியு இந்தியா அஷுரன்ஸ் உதவி மையம்

சென்னை, 19 ஆகஸ்ட் 2025

ஸ்ரீ இராமச்சந்திரா மருத்துவ மையத்தில் நியு இந்தியா அஷுரன்ஸ் கம்பனியின் நோயாளிகளுக்கான ஒரு உதவி மையம் இன்று துவக்கப்பட்டது.

இதனை நியு இந்தியா அஷுரன்ஸ் தலைவரும், நிர்வாக இயக்குனருமான திருமதி. கிரிஜா சுப்ரமணியன் ஸ்ரீ இராமச்சந்திரா உடையார் பிளாக்கின் முதல் தளத்தில் துவக்கி வைத்து பேசியதாவது:

தற்போது அதிகரித்து வரும் மருத்துவ செலவுகள் காரணமாக நாம் மருத்துவ காப்பீடு வைத்திருப்பது மிக அவசியம் என்று வலியுறுத்தினார். தடையற்ற காப்பீட்டு சேவையை மருத்துவமனையில் உறுதி செய்யும் நோக்கத்தோடு இந்த புதிய முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த உதவி மையம், நோயாளிகளுக்கு தேசிய அளவில் மருத்துவ காப்பீட்டு பரிமாற்றம், பணமற்ற காப்பீடு, உடனடி மருத்துவ வசதியை உறுதி செய்யும் வகையில் ஆவணங்கள் சரிபார்ப்பு மற்றும் காப்பீட்டு தொகையை தாமதமின்றி பெறுவதற்கும் வழி வகுக்கும்.

இது போன்ற உதவி மையம், டெல்லி, மும்பை, ஐதராபாத் மற்றும் பெங்களூரு போன்ற நகரங்களில் உள்ள மருத்துவமனைகளில் விரைவில் துவக்கப்படும் என்று அவர் மேலும் கூறினார்.

நிகழ்ச்சியில் ஸ்ரீ இராமச்சந்திரா மருத்துவக்கல்லூரியின் தலைவர் Dr. K. பாலாஜி சிங், மருத்துவ இயக்குனர் Dr. சுதாகர் சிங், காப்பீட்டு துறையின் பொது மேலாளர் திரு. R. மோகன், நியு இந்தியா அஷுரன்ஸ் கம்பனியின் பொது மேலாளர் திரு. ரமேஷ், துணை பொது மேலாளர் திரு. M.V. சந்திரசேகர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

……

Issued by Mr. D. Sivagnanavel, Head, Media & Corporate Relations, SRIHER, 9444 448616.
Ms. P. Kavitha, Sr. Executive, Media Relations, SRIHER, 9444066154.